## காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்

**தமிழ் வருடம் விளம்பி, மாதம் ஆவணி 20ஆம் நாள்**

**ஆங்கில மாதம் செப்டம்பர் 5ம் நாள், 2018 செவ்வாய் கிழமை**

**இன்றைய குறள்**

**அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்**

**உள்ளழிக்க லாகா அரண்**

**பொருள்**

**பகையால் அழிவு வாரமால் பாதுகாக்கும் அரண், அறிவு ஒன்றுதான்.**

**பொன் மொழி**

**புறத்தில் உள்ள வறுமையைக் காட்டிலும், அகத்தில் உள்ள வறுமையே ஆபத்தானது - டாக்டர் இராதாகிருஷ்ணன் -**

**இரண்டொழுக்கப் பண்பாடு**

1. **நான் பயிலும் பள்ளியினையும், வகுப்பறையினையும் எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்வேன்.**
2. **எல்லோரையும் மதித்து நடப்பேன்**

**பழமொழி**

**ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்**

A Friend in need is a friend in deed

**பொது அறிவு**

1. **ஆசிரியர் தினம் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் இராதாக்கிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5 கொண்டாடப்படுகிறது.**
2. **இதே நாளில் பிறந்த மற்றுமொரு தேசிய தலைவர் வ.உ.சிதம்பரம்பிள்ளை**

sowndeeswarischool.com

**05.09.2018**

**இன்றைய முக்கிய செய்திகள்**

1. பிரதமர் மோடி எழுதிய “எக்ஸாம் வாரியர்” புத்தகத்தின் தமிழாக்கம் வெளியிடப்பட்டது.
2. பெட்ரோல், டீசல் மீதான வரியை குறைக்க வாய்ப்பு இல்லை’ என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் உள்ளது.
3. திருச்சி கொள்ளிடம் அணையில் வெள்ளத்தால் உடைந்த மதகுகளையும், சீரமைப்பு பணிகளையும் ராணுவ குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர்.
4. சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதியாக தற்போது தீபக் மிஸ்ரா பதவி வகித்து வருகிறார். அவருடைய பதவி காலம் அடுத்த மாதம்(அக்டோபர்) 2–ந்தேதியுடன் நிறைவடைகிறது.
5. கோல்கட்டா: மேற்குவங்க மாநிலத்தில் நிகழ்ந்த பாலம் இடிந்த விபத்து துரதிருஷ்டவசமானது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.
6. டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவுக்கு ரூ. 71.58 காசுகளாக இன்று வீழ்ச்சி அடைந்தது.

சௌண்டேஸ்வரி